கணக்குக் கொண்டு வராமல் செய்த வகையில் சங்கத்திற்கு இழப்பு ரூபாய் 98,959. திரு. ப. கோவிந்தன், எழுத்தர் சங்கத்தினுடைய கையிருப்புக் கையாடல் மற்றும் இடுபொருட்கள் இருப்புக் கையாடல் செய்த வகையில் சங்கத்திற்கு இழப்பு ரூபாய் 6,518. ரொக்கமாகக் கையாடல் செய்த வகையில் ரூபாய் 2,10,000. 1985-86ஆம் ஆண்டில் சரக்கு மோசடி செய்த வகையில் 2,61,710 ரூபாய். கடன் விற்பனையில் முறைகேடு காரணமாக 719 ரூபாய். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆட்டு மந்தைக் கடன் பட்டுவாடாவில் ஏற்பட்ட நிதி இழப்பு 1,47,550 ரூபாய். ஒப்படைக்காமல் செய்த வகையில் நிதி ரூபாயைக் கையாடல் செய்த வகையில் 31,382 ரூபாய். ஆக 7,57,338 ரூபாய் மோசடி செய்திருப்பதாகக் கணக்கில் வரப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரி கடும் நடவடிக்கை எடுத்து, அதற்குண்டான தண்டனை வழங்கவும் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலப்பு மணம் செய்தவர்களுக்கு அரசின் பரிசு.

*9619—திருமதி எஸ். பி. சற்குணம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967லிருந்து கலப்பு மணம் செய்த எத்தனை பேர் அரசின் பரிசினைப் பெற்றுள்ளார்கள் ?

(ஆ) கடந்த ஓராண்டில் மட்டும் இந்தப் பரிசு எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இதுவரையில் 3,926 பேர்கள் பயன் அடைந்து இருக்கிறார்கள்.

(ஆ) கடந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 594 பேர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பரிசு வழங்குகிற திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த நாள்தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குத் தங்க மடல் பரிசு அளிக்கிற திட்டம் கொண்டுவரப்பட்டது. இப்போது பரிசு எந்த வகையில் வழங்கப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அந்தக் காலத்தில் தங்க மடல் அளிக்கப்பட்டது. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு செலவுத் திட்டத்திற்காக ஆயிரம் ரூபாய், தேசிய நிதிப் பத்திரமாக 4,000 ரூபாய் ஆக மொத்தம் 5,000 ரூபாய் ஒவ்வொரு தம்பதியருக்கும் வழங்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைத் திருமணத்திற்கு 10,000 ரூபாய் வழங்குகிற அரசு ஜாதி ஒழிப்புக்காக, கலப்பு மணம் செய்து பெற்றோர்களுடைய எதிர்ப்பையும், உறவினர்களுடைய எதிர்ப்பையும் சமாளித்து வறுமையில் உழல்கின்ற தம்பதியர்களுக்குத் தரப்படுகிற ரொக்கப் பரிசை இன்னும் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்பதைப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குதல்.

* 1557—திருவாளர்கள் ஆர். அண்ணாநம்பி :

திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது நடைமுறைப் படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 64,093 ஊரகக் குடியிருப்புகள் உள்ளன. இவற்றுள் 1989-90ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் உள்ள நிலவரப்படி 10,323 குடியிருப்புகளில் மட்டும் குடிநீர் வசதி இல்லை என கணக்கிடப்பட்டது. அதில் 7,168 குடியிருப்புகளுக்கு 1990 மார்ச்சுக்குள்ளாகக் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள 3,155 குடியிருப்புகளுக்கும் கலைஞருடைய பிறந்த நாளான ஜூன் 31-க்குள்ளாக செய்து கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதற்குள் இது முடித்து வைக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நான் ஓராண்டுக் காலத்திற்கு முன்னதாகக் கேட்டதாகும். ஆனால், இங்கே ஆழ்துளைக் கிணறு பற்றித் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள் என்று